முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 738**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.10.2021, புதன்கிழமை

1. சூட்சும பலம் கொண்ட அரங்கனே
சுத்தநெறியெனும் சக்திகொண்ட தேசிகனே
மாட்சிமைபட இந்த உலகை மாற்றி
மக்களை ஞானியாக்க வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
வரங்கள் பெற்று என்பால் மாதவசியாக
வையகத்தை தர்ம வழி நடத்துகின்ற அரங்கனே
3. அரங்கனே உன் தர்மம் உலகை வெல்லும்
அரங்கனே உன் சன்மார்க்கம் இந்த உலகை ஆளும்
வரம்பெற்று உன்பால் ஞானவழி வரும் மக்களே
வையகத்தில் தலைமை பதவிகளுக்கு வந்து
4. வந்துமே உலகமெங்கிலும் ஞான ஆட்சி
வடிவேலன் என் ஆசிபட நடத்தப்படும்
ஆசிபெற்ற உன்வழி சீடர்களே அறத்தின்பால் நின்று நிலைத்தன்மை கொண்டு
வாசிவென்ற நிலையடைந்து வையகத்தில் வளமான ஞானஆட்சி தந்து மக்களை காத்திடுவர்
5. காத்திடும் மகா சக்தி நீ
கந்தமூல ஞான யோக சக்தி நீ
சுத்த நெறி கொண்டு உலகோர்க்கு தயாபரத்தை
சிவமாக எந்தன் சொரூபமாக அருளும் யோகி நீ
6. யோகி உன் தீட்சை பெற்ற மக்களே
உலகை மாற்றும் மகா சக்திகளாகி
அகிலத்தில் ஞானிகளாகவும் உருமாறி
அரங்கன் உன்வழி அற்புதம் படைப்பர்
7. அற்புதம் தரும் சர்வ யோகங்களையும்
ஆறுமுகன் யான் உந்தனுக்கு வரமாக தந்துவர
ஏற்பு கொண்டு உன்வழி வருபவர் மூலமே
ஏழாம் படைவீட்டில் இருந்து இந்த மாற்றத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–